1993 ஏப்ரல் 6]

243—

தாலுக்கா மருத்துவமனைகளில் மக்கள் எண்ணிக்கைக்கேற்ப படுக்கைகளை அதிகரித்தல்.

*11358—டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாலுகா மருத்துவமனைகளில் மக்கள் எண்ணிக்கைக் கேற்ப படுக்கைகளைக் கூட்ட அரசுக்குப் பரிந்துரைகள் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கையின் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

முற்பகல் 10–10

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அஞ்சாமை, ஈகை, வீரம், அறிவுடைமை ஆகிய பண்புகளைத் தன்னகத்தேக் கொண்டு தமிழகத்திற்கு வழிகாட்டும் தெய்வமாக விளங்கிக்கொண்டிருக்கிற புரட்சித்தலைவியின் ஆட்சியில் புரட்சித்தலைவி அவர்களின் கட்டளையை உடனுக்குடன் நிறைவேற்றுகிற ஆற்றல் மிக்க அமைச்சராக விளங்கிக்கொண்டிருக்கிற மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள். சரித்திரங்களைப் புரட்டிப் பார்க்குங்கால் சாதனைகள் படைக்கிற புரட்சித்தலைவியின் ஆட்சியில் தாலுக்கா மருத்துவமனைக்குள் அடங்கிய மக்கள் தொகை அதிகமாக இருக்கிற நகரங்களிலாவது இந்தப் படுக்கை வசதிகளை அதிகரிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தாலுக்கா மருத்துவமனைகள் அனைத்திலும் குறைந்த பட்சம் 32 படுக்கைகளாவது இருக்கவேண்டுமென்ற உத்தரவை சமீபத்திலேதான் முதல்வர் அவர்கள் பிறப்

பித்திருக்கிறார்கள். எனவே இனிமேல் எல்லா தாலுக்கா மருத்துவமனைகளிலும் குறைந்தபட்சம் 32 படுக்கைகள் இருக்கும். மற்ற சில இடங்களில் அதிக அளவிலும் இருக்கிறது. ஆனால் குறைந்தபட்சம் 32 படுக்கைகளாவது இருக்கவேண்டுமென்ற நடவடிக்கை இந்த அரசு இந்த ஆண்டு மேற்கொண்டிருக்கிறது.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள பகுதிகளில் உள்ள தாலுக்கா மருத்துவமனைகளில், கட்டாயம் விபத்து பிரிவு வார்டு அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துரித நடவடிக்கை எடுக்க முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அரசு அந்த உணர்விலேதான் செயல்படுகிறது. ஆனால் நிதிநிலைக்கேற்ப படிப்படியாக அவைகளைச் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தாலுக்கா தலைநகரங்களில் நிச்சயமாக 32 படுக்கை வசதிகொண்ட மருத்துவமனைகள் ஏற்படுத்தப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒவ்வொரு நகரப் பஞ்சாயத்திலும் இப்படிப்பட்ட 32 படுக்கை வசதி கொண்ட அரசு மருத்துவமனைகள் ஏற்படுத்தப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தாலுக்கா மருத்துவமனைகளில் மட்டும் குறைந்தபட்சம் 32 படுக்கைகள் கொண்டதாக இருக்கும். மற்றவற்றைப் பற்றி அந்தந்தப் பகுதிகளில் இருக்கின்ற சூழ்நிலைகளைப் பொறுத்துத்தான் சொல்ல முடியும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டாக்டர் மு. சீனியம்மாள்.

டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவினாசி தாலுக்கா மருத்துவமனையில் 1991-92 ஆம் ஆண்டு மக்கள் தொகைக்கேற்ப 32 படுக்கைகளாக உயர்த்தியுள்ள மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அரசு, வரும் நோயாளிகளை கணக்கில்கொண்டு எப்போது போதுமான மருத்துவ அலுவலர்கள், அரசு அலுவலர்கள் நியமிப்பார்கள் என்பதை அமைச்சர் அவர்களின் மூலமாக அறிய விரும்புகிறேன்.

1993 ஏப்ரல் 6]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 32 படுக்கைகளும் நிரம்புகிற அளவுக்கு நோயாளிகள் வருவார்களேயானால், அதற்குத் தகுந்தாற்போல், நிதிநிலைமையையும் கணக்கில் வைத்து நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாலூக்கா மருத்துவமனைகளின் மூலம், கிளை வெளி நோயாளிகள் பிரிவு ஆரம்பிக்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, வெளி நோயாளிகள் பிரிவு (ஓ. பி.) ஆரம்பிக்கப்படுமா என்று கேட்கிறார்களா, அல்லது அதற்குக் கட்டிடம் கட்ட வேண்டுமென்று கேட்கிறார்களா என்று தெரியவில்லை. அங்கே ஓ. பி. பார்க்கிற பணிகளும் நடந்துகொண்டிருக்கின்றன. உள் நோயாளிகளும் இருக்கிறார்கள். கிளை நோயாளிகள் என்று சொன்னார்கள். (குறுக்கீடு) எக்ஸ்டென்ஷன் ஓ. பி. என்கிறார்கள். அப்படியானால் அதிலிருந்து சப்-சென்டர்கள் ஆரம்பிப்பது நடக்காத காரியம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. எம். எம் எஸ். அபுல்ஹசன்.

திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் : துணை சபாநாயகர் அவர்களே, சில தாலூக்கா மருத்துவமனைகளில் இடவசதி போதாமல் நோயாளிகள் வெளியிலே தங்கும்படியான நிலைமைகள் இருக்கின்றன. அதற்காக தனிப்பட்ட பெரியவர்கள் கட்டிடம் கட்டிக்கொடுப்பதாக ஒத்துக்கொள்கிறார்கள். அப்படிக் கட்டிக் கொடுத்தால் அவர்கள் பெயரையும் அங்கே பொறிக்கவேண்டுமென்று கேட்கிறார்கள். அதற்கு அமைச்சர் அவர்கள் அனுமதி அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பெரியவர்கள் அப்படிப்பட்ட முடிவை எடுத்து, வருவார்களேயானால், அந்தக் கட்டிடத்தையும் அவர்களே கட்டி—அரசாங்கம் கூட கட்டுவதற்குப் பணம் கொடுக்கத் தேவையில்லை-அவர்களே கட்டி, அவர்களுடைய பெயரையும் வைத்துக்கொள்வதற்கு நாம் அனுமதி கொடுக்கலாம். மாண்புமிகு பெரியவரே கூட ஏதாவது ஒரு கட்டிடத்தைக் கட்டுவார்களேயானால் நிச்சயமாக நாங்கள் மகிழ்ச்சியடைவோம்.

[1993 ஏப்ரல் 6

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வ. சத்தியமூர்த்தி.

திரு. வ. சத்தியமூர்த்தி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாலுக்கா தலைநகரங்களில் இருக்கிற மருத்துவ மனைகளை அரசு மருத்துவமனைகளாக வைத்துக் கொண்டு, அந்தத் தாலுக்காவுக்கு உட்பட்ட பேரூராட்சிகளில் இருக்கிற அரசு மருத்துவமனைகளையெல்லாம் ஆரம்பச் சுகாதார நிலையங்களாக மாற்றும் அரசு கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிகிறது. சில தாலுக்கா தலைநகரங்கள் சிறிய கிராமங்களில் கூட இருக்கின்றன. அப்படிப்பட்ட சூழ்நிலையில் அந்த தாலுக்காவுக்கு உட்பட்ட பேரூராட்சியில் இருக்கின்ற, ஏற்கெனவே இருக்கின்ற அரசு மருத்துவமனையைத் தொடர்ந்து அரசு மருத்துவமனையாக செயல்படவும், அங்கு இருக்கின்ற ஆரம்ப சுகாதார மருத்துவமனையை அரசு மருத்துவமனை இல்லாத பேரூராட்சிகளில் அரசு மருத்துவமனையாக உயர்த்திடவும் அரசு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 10.15

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு தாலுக்காவிலும் ஒவ்வொரு மருத்துவமனை தேவை. அதைத்தான் தாலுக்கா ஹாஸ்பிடல் என்று சொல்கிறோம். இதைத்தான் இப்போது குறைந்த பட்சம் 32 படுக்கைகள் இருக்க வேண்டும் என்ற முடிவை அரசாங்கம் எடுத்து, அதை இந்த ஆண்டிலே இருந்து முழுமையாக அமுலாக்க இருக்கிறது. நமக்கு 137 தாலுக்கா மருத்துவ மனைகள் இருக்கின்றது. அது போக, Non-Taluk Hospitals சிலவற்றை ஆரம்ப சுகாதார நிலையமாக கடந்த காலத்திலே மாற்றப்பட்டது. அதற்கு என்ன காரணம் என்று சொன்னால், மத்திய அரசாங்கத்திலே இருந்து ஒரு 'நார்ம்ஸ்' கொடுத்தார்கள். 30 ஆயிரம் பாபுலேஷனுக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் இருக்க வேண்டும் ; அதையொட்டி 6 அல்லது 8 துணை சுகாதார நிலையங்கள் அதனுடைய கட்டுப்பாட்டில் இருக்கும் என்ற ஒரு நிலையை உருவாக்கிய காரணத்தால், சில இடங்களிலே ஆரம்ப சுகாதார நிலையம் வைத்துக்கொண்டு, இன்னொரு Non-Taluk Hospitals-ஐயும் பக்கத்திலே வைக்க முடியாது என்ற காரணத்தால், அதை 'கன்வர்ட்' பண்ணினார்கள். அப்படிச் செய்கிறபோது சில இடையூறுகள் ஏற்பட்டன. அதாவது அங்கே மெடிக்கல், லீகல் கேசஸ் பார்ப்பார்கள்: அவை பார்க்காமல் நிறுத்தப்பட்டது. இப்படிப்பட்ட பிரச்சினையைத் தவிர்ப்பதற்காக அரசாங்கம் ஒரு உத்தரவிட்டது. ஆரம்ப சுகாதார நிலையமாக அவை மாற்றப்பட்டாலும், ஏற்கெனவே செய்து வந்த அத்தனை பணிகளையும் அங்கே மறுக்காமல் செய்ய வேண்டும்

1993 ஏப்ரல் 6]

என்ற உத்தரவை அரசாங்கம் இட்டிருக்கிறது. சமீபத்திலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் கேட்டு, அதை இப்போது மாற்றுவதை நாங்கள் தற்காலிகமாக நிறுத்தி வைத்து இருக்கிறோம். எனவே, அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களுடைய உணர்வுகளையும், உங்களுடைய உணர்வுகளையும் தெரிந்த பின்னாலேதான் அது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. ஆனால், ஏற்கெனவே மாற்றிய இடங்களிலே, அதற்கு முன்னாலே அது அரசு மருத்துவமனையாக இயங்கியபோது என்னென்ன பணிகளை அங்கே செய்து கொண்டு இருந்தார்களோ, அத்தனை பணிகளையும் செய்ய வேண்டும் என்ற உத்திரவு ஏற்கெனவே இடப்பட்டு இருக்கிறது. மீண்டும் ஒருமுறை அவர்களுக்கு அது குறித்து நினைவூட்டுக் கடிதமாக அனுப்புவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. வி. பி. சந்திரசேகர்.

திரு. வி. பி. சந்திரசேகர்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தாலுக்கா மருத்துவமனையிலே 32 படுக்கைகள் வசதி இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். தற்போது பொள்ளாச்சியிலே இருக்கிற தாலுக்கா மருத்துவமனையிலே 32 படுக்கைகளும் நிறைந்து வராண்டாக்களிலே நோயாளிகள் படுக்கின்ற நிலை ஏற்பட்டு இருக்கின்றது. அதற்குக் காரணம், பொள்ளாச்சி அருகில் இருக்கின்ற கிணத்துக்கடவு, பொள்ளாச்சி, வால்பாறை ஆகிய 3 தொகுதிகளை உள்ளடக்கிய மருத்துவமனையாக இருப்பதால் நோயாளிகள் அதிகம் இங்கே வருகிறார்கள். இதையே சாட்சியாக வைத்து பொள்ளாச்சி மருத்துவமனைக்கு மேலும் படுக்கை வசதிகள் அளிக்க அமைச்சர் இன்றே அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சியிலே 32 படுக்கைகளுக்கு மேலே இருக்கும் என்று கருதுகிறேன்; எனக்கு உறுதியாகத் தெரியவில்லை. ஆனால், குறைந்தபட்சம் 32 படுக்கைகளாவது இருக்க வேண்டும் என்ற ஒரு கொள்கை முடிவை அரசாங்கம் எடுத்து இருக்கிறது. எந்த அளவிற்கு தேவை என்பதை ஒவ்வொரு மருத்துவமனையாகப் பார்த்து, நிதி நிலைமையையும் கொஞ்சம் பார்த்து, பின்னாலேதான் நடவடிக்கை எடுக்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 244. டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.